விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 15 சனி 31.07.2021 மலர் - 2, இதழ் - 116

# தாய்மொழிக் கல்வி அவசியம்


விஜயபாரதம்

புதிய தேசிய கல்விக் கொள்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து ஓராண்டு முடிவடைவதையொட்டி பிரதமர் மோடி மாணவர்களுடன் வீடியோ கான்பரன்ஸிங் வழியாக கலந்துரையாடினார். அப்போது அவர், 'லட்சக்கணக்கான மாணவர்கள், ஆசிரியர்கள், தன்னாட்சி பெற்ற கல்வி அமைப்புகள் ஆகியோரின் ஆலோசனைகளை பெற்று கல்வி கொள்கை படிப்படியாக அமல்படுத்தப்படுகிறது. புதிய கல்வி கொள்கை மிகப்பெரிய தொலைநோக்கு திட்டம். நாட்டை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும். நம் குழந்தைகளுக்கு நாம் கொடுக்கும் கல்வி தான், நம் நாட்டின் எதிர்காலம். இளைஞர்கள் தங்களுக்கு பிடித்தமான கல்வியை தேர்வு செய்யும் வகையில் புதிய கொள்கை அமைக்கப்பட்டு உள்ளது. மாணவர்களுக்கு தேர்வு மீதான பயத்தில் இருந்து விடுதலை அளிக்கிறது. நாட்டில் பொறியியல் கல்வி பாடங்களை, 11 மொழிகளில் மொழிமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கற்பித்தல் ஊடகமாக தாய்மொழி இருப்பது ஏழை, கிராமப்புற, பழங்குடியின மாணவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும். இதனை முன்னிட்டு எட்டு மாநிலங்களில், 14 பொறியியல் கல்லூரிகளில் ஹிந்தி, தமிழ், தெலுங்கு, மராத்தி, வங்க மொழிகளில் கல்வி கற்பிக்கப்பட உள்ளது. 3 லட்சத்துக்கும் அதிகமான மாற்று திறனாளி மாணவர்களுக்காக சைகை வழி கல்வி தேசிய கல்வி கொள்கையில் ஒரு தனிப்பாடமாகவே சேர்க்கப்பட்டுள்ளது' என தெரிவித்தார்.

# இட ஒதுக்கீடு அமல்


விஜயபாரதம்

அகில இந்திய மருத்துவ படிப்பில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு (ஓ.பி.சி) பிரிவினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. நடப்பு கல்வியாண்டிலேயே மருத்துவ படிப்புகளில் ஓ.பி.சி பிரிவினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடும் பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கும் இந்த ஆண்டு முதல் 10 சதவீத இட ஒதுக்கீடும் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் சுமார் 1,500 இளங்கலை மருத்துவ படிப்பு மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்றும், முதுகலை மருத்துவப் படிப்புகளில் ஆண்டுக்கு சுமார் 2,500 மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தரமற்ற ரேஷன் அரிசி



விஜயபாரதம்

உடுமலைப்பேட்டை வட்டம், மாவடப்பு, காட்டுப்பட்டி பழங்குடியினர் கிராமங்களில் சுமார் 200 குடும்பத்தினர் வசிக்கின்றனர். இவ்விரு கிராமங்களுக்கும் சேர்த்து மாவடப்பு கிராமத்தில் வைத்து ரேஷன் அரிசி உள்ளிட்ட பொருட்களை அரசு வழங்குவது வழக்கம். கடந்த 2 ஆண்டுகளாக அரசின் ரேஷன் பொருட்கள் ஊருக்கே வந்து வழங்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது முன்பை போல சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று காடம்பாறையில் இம்மக்கள் ரேஷன் பொருட்களை வாங்கி வருகின்றனர். தற்போது வழங்கப்பட்டு வரும் ரேஷன் அரிசி மிகவும் தரமற்றதாக உள்ளது. சமைத்துச் சாப்பிட முடியவில்லை என்றும் மலைவாழ் பழங்குடி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதனையடுத்து அவர்கள் முற்றுகை போராட்டம் நடத்தினர். இங்கு மட்டுமல்ல, சமீபகாலமாக ரேஷன் பொருட்கள் அனைத்தும் தரமற்று இருப்பதாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் குற்றச்சாட்டுகள் எழுந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# டேனிஷ் சித்திக் கொலையின் பின்னணி



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் தலிபான்களுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கி சூட்டில், பாரத புகைப்பட பத்திரிகையாளர் டேனிஷ் சித்திக் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கு தலிபான்கள் வருத்தம் தெரிவித்ததாகவும் செய்திகள் வெளியாகின. அவருக்காக நமது நாட்டில் பெரிய ஊர்வலங்கள், அஞ்சலிகள் எல்லாம் நடத்தப்பட்டன. ஆனால், தற்போது இவரது கொலை குறித்த அதிர்ச்சிகரமான உண்மை தற்போது வெளியாகியுள்ளது.

அமெரிக்கன் எண்டர்பிரைஸ் இன்ஸ்டிடியூட்டில் என்ற அமைப்பை சேர்ந்த மைக்கேல் ரூபின் என்பவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், 'தாலிபான்கள் அவரை மசூதி ஒன்றில் இருந்து வெளியே இழுத்து வந்தனர். அவர் பாரதத்தில் இருந்து வந்தவர்தான் என தெரிந்ததும் அவரது ஆவணங்களை சரிபார்த்து உறுதிபடுத்தினர். பின்னர் அவரையும் அவருடன் இருந்தவர்களையும் கொடூரமாக தாக்கி தூக்கில் போட்டுள்ளனர். அதன் பிறகே துப்பாக்கியால் சுட்டுள்ளனர். அவரது தலையில் பலமாக தாக்கப்பட்டதன் அடையாளங்கள் உள்ளன. சித்திக்கை காக்க சென்ற ஆப்கன் ராணுவ வீரர்கள், தளபதியையும் சுட்டுக் கொன்றனர்' என தெரிவித்துள்ளார்.

ஏதோ தவறுதலாகவே அவர் சுடப்பட்டு இறந்ததாக கூறிவரும் இங்குள்ள பத்திரிகையாளர்கள், நடுநிலைவாதிகள், அரசியல்வாதிகள் எல்லாம் தற்போது தலிபான்களின் உண்மை முகம் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ள சூழலில், இது குறித்து வாய் திறப்பார்களா?

# தோற்றால் கழுத்தறுப்பேன்



விஜயபாரதம்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க., பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் தா.மோ.அன்பரசன், 'வரும் உள்ளாட்சித் தேர்தல், மிக மிக முக்கியமான தேர்தல். உள்ளாட்சித் தேர்தலில், மதுராந்தகம் தொகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தலைவர் பதவிகளை கைப்பற்றியாக வேண்டும். அதில் தோல்வி அடைந்தால் கட்சி ஒன்றிய செயலர்கள் கழுத்தை அறுத்து விடுவோம். தி.மு.க.,வுக்கு துரோகம் செய்யும் கட்சியினர் வாழ மாட்டார்கள். எதிர்காலத்தில் உருப்பட மாட்டார்கள். தேர்தலில் துரோகம் செய்தால், நடுரோட்டில் நிற்க வேண்டியது வரும். துரோகிகளை கேட்க நாதி இருக்காது. தலைமை அறிவிக்கிற வேட்பாளர்களை, வெற்றி பெற வைக்க வேண்டும்' என பேசியுள்ளதாக கூறப்படுகிறது. இந்த செய்தி தி.மு.கவினரிடமும் மக்களிடமும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.


# ஒருதலைப்பட்ச காவல் அதிகாரி



விஜயபாரதம்

தென்காசி மாவட்டம் கடையம் ஒன்றியம் புலவனூர் கிராமத்தில் கிறிஸ்தவர்களுக்கு ஆதரவாக கடையம் காவல் ஆய்வாளர் ரெகுராஜன், சர்ச் அருகில் உள்ள வீட்டு வாசலில் இந்து முன்னணி கொடியேற்றக் கூடாது என மிரட்டிய வீடியோ இணையதளங்களில் வைரலாக பரவியது. கிறிஸ்தவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு இந்து முன்னணி இளைஞரை கைது செய்த கடையம் காவல் ஆய்வாளர் ரெகுராஜனின் ஒருதலைப்பட்சமான போக்கை கண்டித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் சட்டத்திற்கு புறம்பாக அடக்குமுறையில் ஈடுபட்ட அந்த காவல் ஆய்வாளர் மிரட்டலுக்கு அஞ்சாமல் அந்த வீட்டுப் பெண்மணியும் இந்து முன்னணி இளைஞரும் வாசலில்தானே கொடியேற்றக் கூடாது, நாங்கள் எங்களின் வீட்டு உச்சியில் கொடியேற்றுவோம் என்று வீட்டு உச்சியில் கொடியேற்றினர். தற்போது இந்து முன்னணி புகாரின் பேரில் கிறிஸ்தவ சர்ச் ஆக்கிரமித்து வைத்திருந்த 70×6 = 420 சதுரஅடி அரசு இடத்தில் இருந்த கட்டடத்தை தென்காசி மாவட்ட வருவாய்துறையினர் இடித்து அகற்றினர்.

# சந்தேஷ் செயலி




விஜயபாரதம்

மத்திய அரசு சந்தேஷ் என்ற உடனடி செய்தி தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதுகுறித்து மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் மக்களவையில் கூறுகையில், 'ஆத்ம நிர்பர் பாரத் திட்டத்தின்படி மத்திய அரசு பாரதத்திலேயே முழுமையாக உருவாக்கப்பட்ட இந்த செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது. இது ஒரு ஓப்பன் சோர்ஸ் அடிப்படையிலான, பாதுகாப்பான, மேகக்கணினி இயக்க தளம், இதில் வாட்ஸ்ஆப் போன்றே தனி செய்தி, குழு செய்தி, கோப்புகள், ஊடக பகிர்வு, ஆடியோ வீடியோ அழைப்பு போன்ற அம்சங்கள் உள்ளன. மேலும் இகவர்னன்ஸ் ஒருங்கிணைப்பும் இதில் உள்ளது. கூகிள் பிளே ஸ்டோர் மற்றும் ஆப் ஸ்டோரில் கிடைக்கிறது. ஆனால் சந்தேஷ் செயலி, அரசு ஊழியர்கள் மற்றும் அரசு ஏஜென்சிகள் மத்தியில் உள்நாட்டில் மட்டுமே தற்போது பயன்படுத்தப்படுகிறது' என்று அவர் தெரிவித்தார்.

---

# அமைச்சர் மருமகள் சர்ச்சை பேச்சு



விஜயபாரதம்

ஸ்டேன் சாமிக்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்ச்சி திண்டுக்கல்லில் நடந்தது. இதில் கலந்து கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமியின் மருமகளும், திமுக எம்.எல்.ஏ செந்தில்குமாரின் மனைவியுமான மெர்ஸி செந்தில்குமார், பாதிரியார் ஸ்டேன் சாமியின் மரணத்திற்கு குரல் கொடுப்பதற்காக நான் இங்கு வந்திருக்கிறேன். ஒரு பாதிரியார் இறந்து விட்டார். அவருக்கு இப்போது குரல் கொடுக்கிறார்கள். நாளையும் எங்கோ ஓரிடத்தில், பாதிரியாரோ, சிஸ்டரோ போராடி கொண்டுதான் இருப்பார்கள். பாதிரியார்கள், சிஸ்டர்கள் வந்த பிறகே நமக்கு கல்வியும், பகுத்தறிவும் கிடைத்தது. உலகில் உள்ள பாதிரியார்களையும், சிஸ்டர்களையும், ஹீரோ, ஹீரோயின்களை போல பார்க்க வேண்டியது அவசியமானது. இந்த உலகில் எவனாக இருந்தாலும், பாதிரியாரையும், சிஸ்டரையும் கைது செய்ய வேண்டும் என்றால், வாடிகனில் உள்ள போப்பிடம் அனுமதி பெற வேண்டும் என ஒரு சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்' என பேசி உள்ளார். அவரது இந்த சர்ச்சை பேச்சு வீடியோ, சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இந்நிலையில், ஸ்டேன்சாமி, பீமா கோரேகான் வழக்கில் என்.ஐ.ஏவால் கைது செய்யப்பட்ட பயங்கரவாத ஆதரவாளர். தற்போது கைது செய்யப்பட்டுள்ள பாதிரி ஜார்ஜ் பொன்னையா, ஹிந்து கடவுள்கள், பாரதத்தாய், பிரதமர் என அனைவரையும் கீழ்தரமாக பேசியவர், இவர்கள் இருக்கும் தி.மு.கவையே பிச்சைக்காரர்கள் என்றவர் என்பதை மறந்து தனது மதவெறியை மெர்சி செந்தில்குமார் வெளிப்படுத்தியுள்ளார். பிராங்கோ முலக்கல் போன்ற ஆயிரக்கணக்கான பாதிரிகளால் லூசி கலப்புரா போன்ற லட்சக்கணக்கான கன்னியாஸ்திரிகள் மீது நடத்தப்படும் பாலியல் பலாத்காரங்கள் குறித்தோ, அதனை கண்டுகொள்ளாத வாடிகன் குறித்தோ மெர்சி பேசுவாரா என நெட்டிசன்கள் அவருக்கு கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

# மத நம்பிக்கையில் காவல்துறை தலையீடு

ஆடிமாத கோயில் திருவிழாக்களில் நேர்த்திக்கடன் என்ற பெயரில் குழந்தைகளுக்கு அலகு குத்துவது, தீச்சட்டி எடுக்க வைப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டால் குழந்தைகளின் பெற்றோர் கைது செய்யப்படுவார்கள், கோயில் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என குடியாத்தம் சப் டிவிஷன் டி.எஸ்.பி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார். இப்படி ஹிந்து மத பழக்க வழக்கங்களை, பண்பாட்டை அழிக்க நினைக்கும் மதரீதியாக செயல்படும் குடியாத்தம் காவல் அதிகாரிக்கு இந்து முன்னணி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மத சுதந்திரத்திற்கு எதிரான இது போன்ற நடவடிக்கைகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்துள்ளது.

விஜயபாரதம்

# கவர்ச்சித் திட்டங்கள் உஷார்





விஜயபாரதம்

ஒரு முட்டையின் விலை, 2 ரூபாய், 24 பைசா மட்டுமே என பத்திரிகையில் அதிரடி விளம்பரம் வெளியிட்டு மக்களை ஆச்சரியப்படுத்திய Rafoll Retails(opc) pvt. Ltd., Eggmart என்ற நிறுவனம் அதே சமயம் முட்டை விற்பனையாளர்கள் வயிற்றில் புளியை கரைத்தது. அந்த விலையில் தரவே முடியாது என மொத்த விற்பனையாளர்கள்கூட தெரிவித்தனர். அந்த நிறுவனம் இந்த திட்டம் குறித்து விளக்கம் அளிப்பதற்காக பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்தில் ஆஜராக அழைப்பு விடுக்கப்பட்டது. அதை ஏற்று, ஆஜரான அதன் நிறுவனர் சிவம் நரேந்திரன், முறையான ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை. மேலும், எங்கள் நிறுவனத்தை மேற்கொண்டு நடத்தவில்லை. பணம் கட்டியவர்களுக்கு, அதே முறையில் திருப்பி அனுப்பி விடுகிறோம். எங்கள் நிறுவனத்தின் பெயரில் இயங்கும் ஆன்லைனை முடக்கி விடுகிறோம்' என்றும் தெரிவித்தார். அதன்படி செய்தும் விட்டார். இதுபோன்று வெளியிடப்படும் போலி விளம்பரங்களை நம்பி, பணத்தை கட்டி ஏமாற வேண்டாம் என காவல்துறையினர் மக்களை எச்சரித்துள்ளனர்.

# தாயகம் திரும்பும் நமது அடையாளங்கள்

பாரதத்தின் கலை, பண்பாடு, ஆன்மிகத்தை வெளிப்படுத்தும், எட்டு பழங்கால சிலைகள் மற்றும் ஆறு ஓவியங்கள் ஆஸ்திரேலிய அருங்காட்சியகத்தில் இருந்து பாரதத்திற்கு திருப்பி அனுப்பப்பட உள்ளன என 'நேஷனல் கேலரி ஆப் ஆஸ்திரேலியா' அறிவித்துள்ளது. சுபாஷ் கௌர் என்ற, சிலைத் திருடனால் திருடி விற்கப்பட்ட இவைகளில் மகிஷாசுர மர்த்தினி கற்சிலை குஜராத்தைச் சேர்ந்தது. நடன நிலை திருஞானசம்பந்தர், நாயன்மார் சிலை, தமிழகத்தை சேர்ந்தவை. மேலும் ராஜஸ்தான், உ.பி., ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களைச் சேர்ந்த சிலைகளும் ஓவியங்களும் அடங்கும்.



# இஸ்ரோ உளவு விவகாரம்

விஜயபாரதம்

கடந்த 1994ல் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோவில் உளவு பார்த்ததாக நம்பி நாராயணன் உட்பட சிலர் கைது செய்யப்பட்டனர். சி.பி.ஐ விசாரணையில் நம்பி நாராயணன் உள்ளிட்டோருக்கு இவ்வழக்கில் எந்த தொடர்பும் இல்லை என்பதும் இந்த பொய் குற்றச்சாட்டுக்கு சில காவல் அதிகாரிகள்தான் காரணம் என்பது தெரியவந்தது. முன்னாள் கேரள காவல் அதிகாரிகள் உட்பட 18 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட முன்னாள் புலனாய்வு துணை இயக்குனரும் குஜராத் முன்னாள் டி.ஜியுமான ஸ்ரீகுமார் முன்ஜாமின் கோரி மனு தாக்கல் செய்தார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்த சி.பி.ஐ, இந்த விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருக்கலாம்' என குறிப்பிட்டுள்ளது.

# புலிகள் காப்பகம் உலக அங்கீகாரம்



விஜயபாரதம்

புலிகள் பாதுகாப்பு என்பது காடுகளின் பாதுகாப்பின் அடையாளம். இதனால் காடுகளைக் காக்க புலிகளை பாதுகாப்பது அவசியமாகிறது. பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் புலிகளின் எண்ணிக்கையை உயர்த்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் விளைவாக, தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் கூற்றுப்படி, கடந்த 2010ல் பாரதத்தில் புலிகளின் எண்ணிக்கை 1,076 ஆக இருந்தது ஆனால் கடந்த 2018ல் அவைகளின் எண்ணிக்கை 2,967 ஆக உயர்ந்துள்ளது. மொத்தம் 18 மாநிலங்களின் காடுகளில் புலிகள் வாழும் நிலப்பரப்பில் சிறுத்தைகளின் எண்ணிக்கை சுமார் 12,852 என மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது, உலகளாவிய புலிகள் பாதுகாப்பு தரநிர்ணய அமைப்பு (CA|TS), அசாமில் உள்ள உலக புகழ்பெற்ற காசிரங்கா தேசிய பூங்கா, மனஸ் மற்றும் ஒராங் தேசிய வனங்களை புலிகளின் காப்பகங்களாக அங்கீகரித்துள்ளது. இதனால் இவை தற்போது சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பூபேந்திர யாதவ், இதற்கு தனது பாராட்டுகளை தெரிவித்தார். அப்போது, சத்புரா, கன்ஹா, பன்னா புலிகள் காப்பகங்கள் (மத்திய பிரதேசம்), முதுமலை, ஆனமலை (தமிழ்நாடு), பெஞ்ச் (மகாராஷ்டிரா), பரம்பிக்குளம் (கேரளா), பந்திப்பூர் (கர்நாடகா), துத்வா (உத்தரபிரதேசம்), வால்மீகி (பீகார்) மற்றும் சுந்தர்பன்ஸ் (மேற்கு வங்கம்) ஆகியவையும் அதே வகையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளதை நினைவுகூர்ந்தார்.

# உத்தம் சிங்



விஜயபாரதம்

ஆங்கிலேய அரசு கொண்டு வந்த ரௌலட் சட்டத்தை எதிர்த்து ஜாலியன் வாலாபாக்கில் கூட்டம் நடந்தது. 20,000 பேர் கூடியிருந்தார்கள். தொன்னூறு பேர் கொண்ட படைகளோடு வாகனங்களில் இயந்திர துப்பாக்கிகளை கொண்டு வந்த காவல் துறை அதிகாரி ரெஜினால்ட் ஓ டயரின் படை, எவ்வித எச்சரிக்கையும் இன்றி அப்பாவி மக்களை நோக்கி 1,650 ரவுண்டுகள் சுடப்பட்டது. மக்கள் செத்து விழுந்தார்கள். பலர் கிணற்றில் விழுந்து இறந்து போனார்கள். "சுட்டேன் சுட்டேன்... துப்பாக்கி குண்டுகள் தீரும்வரை சுட்டேன்'' என டயர் கொக்கரித்தான். டயர் செய்ததைச் சரி என்று ஆதரித்தார் மாகாண ஆளுநர் மைக்கேல் டயர் ரெஜினால்ட். இங்கிலாந்து நாடாளுமன்றம் அச்செயலை ஆதரித்துத் தீர்மானம் போட்டது.

இந்தப் படுகொலையை அறிந்த உத்தம் சிங் இரு ஆங்கிலேய அதிகாரிகளையும் கொல்ல உறுதி பூண்டார். நேரடியாக இங்கிலாந்து போகாமல் கென்யா, அமெரிக்கா, ஜெர்மனி என அலைந்து இங்கிலாந்து சென்றார். பன்றி தொழுவத்தில் வேலை பார்த்தார். பசி வாட்டி எடுக்க இருபதாண்டு கால வெறியை அடக்கி வைத்திருந்தார். ரெஜினால்ட் ஓ டையர் ஏற்கனவே இறந்து போக இயற்கை முந்திக்கொண்டது என வருத்தப்பட்டார்.

ஒரு நிகழ்ச்சிக்காக காக்ஸ்டன் ஹாலுக்கு மைக்கேல் டயர் மற்றும் ஜெட்லாண்ட் எனும் அமைச்சர் வந்ததும் குறிபார்த்து ஆறு முறை சுட்டார். இறந்து போனான் டயர். வந்த வேலை முடிந்ததும் ஓடாமல் கம்பீரமாக அங்கேயே நின்ற உத்தம் சிங் ,"என்னுடைய வேலை முடிந்தது, என் நெஞ்சின் கனல் தணிந்தது" என்று அறிவித்தார். நீதிமன்றத்தில், "டயர் தூக்கு தண்டனைக்கு உரியவன் அதைத்தான் நான் தந்தேன்" என்று உறுதிபடச் சொன்னார்.

''சுட்டேன் சுட்டேன்... ஆங்கிலேயனை ஆங்கிலேய மண்ணில் அவன் உயிர் பிரியும்வரை சுட்டேன்!"என்று சொல்லி கம்பீரமாகத் தூக்கு மேடை ஏறினார் அந்த வீரன். எங்கள் நாட்டை அடிமைப்படுத்திய ஆங்கிலேய மண்ணில் 6 அடி நிலத்தை ஒரு இந்தியன் நிரந்தரமாக ஆக்கிரமித்தான் என்பதை உங்களுக்கு நினைவூட்ட என்னுடைய பிணம் ஆங்கிலேய மண்ணில் புதைக்கப்பட வேண்டும் எனும் அளவுக்குத் தேசபக்தி ஊறியிருந்தது அவரிடம். டைம்ஸ் பத்திரிக்கை அவருக்கு புகழாரம் சூட்டியது. 'யானை போலப் பழி வாங்காமல் ஓயமாட்டார்கள் இந்தியர்கள்' என்று ஜெர்மனி வானொலி அறிவித்தது.

**மாவீரன் உத்தம் சிங்கின் நினைவு தினம் இன்று.**

# வலையில் சிக்கிய மீம்கள்





## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006